ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 1 பிப்ரவரி 1996 கானம் : 7

ஸ்ரீ ஹரி :

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 1 பிப்ரவரி 1996 கானம் : 7

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாசகர்களுடன் | 3 |
| 2. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 4 |
| 3. | மதுரமான மஹனீயர் - 3 | 5 |
| 4. | ஸ்ரீ குருஜி - 6 | 10 |
| 5. | யுக தர்ம ஸ்தாபகர்கள் - 6 | 12 |
| 6. | ஸம்ஸ்க்ருத ஸம்மேளனத்தில் ஸ்ரீ குருஜியின் உரை | 14 |
| 7. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 6 | 18 |
| 8. | ப்ரச்நோத்தர ரத்நமாலிகா - 1 | 23 |
| 9. | செய்திகள் | 30 |
| 10. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



தனுர் மாதம் உஷத் காலம் - சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி கோயிலின் மாடவீதிகளில் நாம ஸங்கீர்த்தனம் பாடி வரும் ஸ்ரீ குருஜியும், பக்தர்களும்.
(Photo by Sri S. Sridhar)

# வாசகர்களுடன்...

***மதுரமுரளி*** என்ற இந்த மாத இதழ் ஜனங்களுக்கு ***உண்மையான ஆன்மீகத் தெளிவு ஏற்படவும், பகவந்நாம மஹிமையை எடுத்துரைக்கவும், ஸ்ரீ குருஜியின் உபதேசங்களை எல்லோருக்கும் தெரியப்படுத்தவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பிரத்யேகமான மாத இதழ்.***

*ஸ்ரீ குருஜி இதை ஆரம்பிக்கும் பொழுது சில சம்பிரதாயமான ஆசார்யர்களால் நடத்தப்பட்டுவரும் மிகவும் கடினமான விஷயங்கள் உள்ள இதழ் போல இது அமையக்கூடாது. அது போல், ஆன்மீக இதழ் என்ற பெயரில் வரும் ஜன ரஞ்சகமான புஸ்தகம் போலவும் இது அமையக் கூடாது. இரண்டுக்கும் நடுவில் இருந்து* ***மிகவும் பெரிய விஷயங்களை எவ்வளவு சுலபமாக எடுத்துச் சொல்ல முடியுமோ அப்படிச் சொல்லி எல்லோரையும் அந்த விஷயங்கள் அடைய செய்ய வேண்டும் என்பது தான் மதுரமுரளியின் குறிக்கோளாக*** *அமைய வேண்டும் என்று அருளினார்கள்.*

*ஆகவே* ***இது நமது மிஷனின் பிரத்யேகமான மாத இதழ்*** *என்பதை மீண்டும் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.*

*ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆக்ஞையின்படி இந்த இதழிலிருந்து* ***'ப்ரச்நோத்தர ரத்நமாலிகா'****வை வெளியிடுகின்றோம்.*

*அன்புடன்,*

**S. ஸ்ரீதர்**
ஆசிரியர்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம்:- சங்கராபரணம் தாளம்:- ஆதி

பல்லவி

*நவநீத நாட்யம் செய்கின்றான் கண்ணன்*
*நட்டுவாங்கம் செய்ய யார் வாரீர்?*

அனு பல்லவி

*நவநீதம் நவநீதம் என்றே வாய் பாடும்*
*வெண்ணை இருக்கும் இடத்தையே கண்கள் தேடும்*
*பானைகளைப் பார்த்து பாதங்கள் ஆலாய் பறக்கும் (நவநீத)*

சரணம்

*பானையிலே வெண்ணை இல்லாவிட்டால் சோகம்*
*வெண்ணை இருக்கும் இடத்தைக் கண்டுவிட்டால் காம்பீர்யம்*
*வெண்ணையைக் கையில் எடுத்துவிட்டால் ஆனந்தம்*
*மாமி வரும் சப்தம் கேட்டால் பயம்*
*அள்ளிக் கொடுக்கும் போது வாத்ஸல்யம்*
*மந்திக்கும் பங்கிடும் போது ஹாஸ்யம்*
*நாற்றமெடுக்கும் வெண்ணையைக் கண்டாலோ ரௌத்ரம்*
*ராதைக்கென்று தனியே எடுத்து வைத்தால் ச்ருங்காரம்*
*இத்தனையும் செய்து விட்டு யசோதை முன் சாந்தம் (நவநீத)*

❀ ❀ ❀

# மதுரமான மஹனீயர் - 3

மேலும் அப்பொழுது மதியம் இரண்டு மணி தான் இருக்கும், பால்காரன் வரவும் நாழியாகும்; மற்றும் வீட்டுத் தோட்டத்திலேயே நிறைய இளநீர் இருக்கின்றது, பறிப்பதற்கு ஆள் இப்பொழுது வரவும் மாட்டான்; மேலும் முன்னமேயே பட்டாசார்யாரிடம் சொல்லவும் வேண்டும் என்று ஆரா அமுதனின் தகப்பனார் ஸ்ரீ குருஜியிடம் சொன்னார். ஆனால் அதற்கு ஸ்ரீ குருஜி பிடிவாதமாக, இன்றே திருமஞ்சனம் செய்தாக வேண்டும், பகவான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவான் என்றும் கூறினார்.

அந்த சமயத்தில் ஆரா அமுதனின் தகப்பனாரைத் தேடிக் கொண்டு ஒரு சிநேகிதர் வந்தார். அவர், தான் ஊத்துக்காடு ஊருக்கு மிகவும் அருகாமையில் உள்ள ஆவூர் என்ற ஊரில் உள்ளதாகவும், தனக்கு பக்கத்து வீட்டில்தான் ஊத்துக்காடு கோயில் பூஜகர் இருப்பதாகவும் பேச்சு வாக்கில் தெரிவிக்கவே, நாங்கள் ஊத்துக்காடு ஸ்ரீ க்ருஷ்ணனுக்குத் திருமஞ்சனம் செய்ய இருப்பதைத் தெரிவித்தவுடன், நான் போய் அந்த அர்ச்சகரிடம் சொல்லி அவரை கோவிலுக்குக் கையுடன் ஸ்வாமி நைவேத்யத் திற்காக ஒரு பிரசாதமும் செய்து எடுத்துக் கொண்டு வரச் சொல்லி விடுகின்றேன் என்று கூறி விட்டு கிளம்பி விட்டார்.

அடுத்ததாக, திடும் என்று மாடு பால் கறக்கும் நபர் அன்று மாலை தனக்கு ஏதோ அவசர வேலை இருப்பதாகக் கூறி, மதியம் 2 மணிக்கே வந்து பால் கறந்து கொடுத்து விட்டார். மூன்றாவதாக சிறிது நேரம் கழித்து வாசலில் ஒரு ஆள் இளநீர் பறிக்க வேண்டுமா என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்து இளநீரும் பறித்துக் கொடுத்து விட்டுச் சென்றான்.

இப்படியாக ஒவ்வொரு சாமானும் சேர்ந்துவிட ஒரு அழகிய மயில் கண் பட்டு வேஷ்டியும், காளீய நர்த்தனம் புரியும்

கால்களுக்கு அழகான வெள்ளிச் சலங்கைகளும் வாங்கிக் கொண்டு ஊத்துக்காடு க்ஷேத்திரத்தை அடைய, அங்கு பட்டாச்சார்யார் காத்துக் கொண்டிருந்தார். பகவான், தன்னுடைய நாம கீர்த்தனங்களைக் காது குளிர கேட்டுக் கொண்டே திருமஞ்சனம் செய்து கொண்டான். அப்பொழுது இருந்த பட்டாச்சார்யாரும் பாகவத அபிமானம் உள்ளவராக இருந்ததால் வந்தவர்களுடன் சேர்ந்து தானும் கீர்த்தனம் பாடிக்கொண்டே மிகவும் அழகாக ரசித்து ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு அலங்காரமும் செய்தார்.

இதில் நான் கலந்து கொள்ளவில்லை. உடன் சென்றிருந்த பக்தர் மூலமாகத் தெரிந்து கொண்டேன். எதற்காக இதை எழுதினேன் என்றால் ஸ்ரீ குருஜியின் சங்கல்பங்கள் எல்லாம் எப்படி நிறைவேறுகிறது என்பதைக் கூறத்தான். அவர் எவ்வளவோ பெரிய பெரிய காரியங்களை நடத்த ஆரம்பிப்பார். எப்படியோ அதற்குத் தேவையான விஷயங்கள் கிடுகிடுவென்று தானாக வந்து அமையும். ஸ்ரீ குருஜி, இப்படி பெரிய பெரிய Planகளாகப் போடுகின்றாரே இதற்கு நிறையப் பணம் தேவைப்படுமே, வசூல் ஆகவில்லை என்றால் ஸ்ரீ குருஜிக்கு சிரமமாகப் போய்விடுமே என்று அஞ்ஞானத்தால் எங்களுக்குக் கவலையாக இருக்கும். ஆனால் அவர் கவலைப்படமாட்டார். எப்படியோ பணம் வசூல் ஆகிவிடும், மிகவும் அழகாக நடந்தும் விடும். இத்தனைக்கும் எனக்குத் தெரிந்து ஸ்ரீ குருஜி இது நாள் வரை யாரிடமும் பணமோ, பொருளோ, வாய் திறந்து கேட்டுப் பார்த்ததில்லை. உபன்யாசங்கள் செய்வதற்கும் அநேகமாக அவர் பணம் வாங்குவதில்லை. யாராவது அவர்கள் சக்திக்கு மீறி கொடுத்தாலும் தொடக்கூட மாட்டார். இப்படி இருக்கையிலும் அவருடைய கார்யங்கள் எல்லாம் மிகவும் அழகாக திட்டமிட்டது போல் நடக்கும்.

ஸ்ரீ குருஜி ஏதாவது ஒரு கார்யத்தைச் செய்ய ஆரம்பித்தால் அதை மிகவும் அழகுடன் ஒழுங்காகத் திறம்பட

செய்ய வேண்டும் என்று நினைப்பார். இவற்றில் மிகவும் முக்கியமானவைகளாகச் சொல்ல வேண்டும் என்றால், **கும்பகோணத்தில் சுமார் 40 வித்வான்களைக் கூட்டி மூன்று நாட்களுக்கு நடந்த "அத்வைத வேதாந்த சதஸ்"** மிகவும் குறிப்பிட வேண்டிய ஒன்று. ஸ்ரீ மஹா பெரியவாள் திருப்பதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய அத்வைத சதஸுக்குப் பிறகு நடந்தது இதுதான் என்று பலர் கூறி மகிழ்ந்தார்கள். வாஜ்பாயி முசிறி தீக்ஷிதர் தான் தலைமை வகித்து நடத்திக் கொடுத்தார். அடுத்ததாகக் குறிப்பிட வேண்டியது, பாகவதர்கள் சூழ நாங்கள் மேற்கொண்ட பிருந்தாவன, ஹரித்வார், ரிஷிகேஷ், பத்ரிகாச்ரம யாத்திரை நெஞ்சை விட்டு அகலாத மிகவும் அழகான யாத்திரை, அதற்கடுத்ததாக **காசியில் மிகவும் விமரிசையாக நடந்த ஸ்ரீ மஹா பெரியவாளின் 100-வது ஜயந்தி விழா. 5 km தூரத்திற்கு Military Force-ன் மரியாதையுடன் நாம கீர்த்தனம், வேத பாராயணம், யதீஸ்வரர்கள் அநேகம் பேர் புடை சூழ ஸ்ரீ பெரியவாள் படப் புறப்பாடுடன் ஜயந்தி மஹோத்ஸவம்** நடைபெற்றது.

பண்டரீபுரமும் பாகவதர்கள் புடை சூழ யாத்திரை செய்து வந்தோம். சமீபத்தில் மாம்பலம் அஸ்வமேத அயோத்யா மண்டபத்தில் 7 நாட்கள் கோலாகலமாக நடைபெற்ற **ஸங்கீர்த்தன ஸப்தாஹம்.** இதைத்தவிர எத்தனையோ பாகவத, ராமாயணப் பாராயணங்கள், வேத பாராயணங்கள், சதஸ்கள், கச்சேரிகள், 100-க்கும் மேற்பட்ட ராதா கல்யாணங்கள், ப்ரவசனங்கள், திவ்ய நாமங்கள், உத்ஸவங்கள் என்று அநேக வைபவங்கள்.

எந்த காரியத்தையும் துளிக்கூட லௌகீக சம்மந்தமே இல்லாமல், சம்ப்ரதாயமாகத்தான் எல்லா காரியங்களையும் செய்விப்பார். அப்படி நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளிலும் எல்லோருக்கும் சரியான விதத்தில் ஆகார வசதிகள் செய்வதிலேதான் அவரின் முழு கவனமும் இருக்கும். யார்

ஆஸ்ரமத்திற்கு வந்தாலும் முதலில் சாப்பாடாகி விட்டதா? என்று தான் கேட்பார். யாரும் சாப்பிடாமல் போகக் கூடாது என்பார். இப்படி அவர் நடத்தி முடிக்கும் **எல்லா காரியங்களிலும் பகவான் சந்தோஷப்பட்டதற்கு அடையாள மாக, பூர்த்தியன்று சோவென்று மழை பொழியும்.**

யார் வந்து அவரிடம் தங்களின் பிரச்னைகளையும் குடும்பக் கவலைகளையும் கூறினாலும் பொறுமையுடன் கேட்பார். பல விஷயங்களில் அந்த பிரச்சனைக்குப் புது கோணத்தில் ஆராய்ந்து ஒரு தீர்வு சொல்லுவார். அவர்களுக்கே அது பிரமிப்பாக இருக்கும். இப்படியே பலரின் கவலைகளை மிகவும் சுலபமாக தீர்த்து உள்ளார்.

ஏன், தான் எல்லோருடைய பிரச்சனைகளையும் கேட்கின்றேன் என்றால், அவைகளைத் தீர்க்கக் கூடிய சக்தி தனக்கு இருக்கின்றதோ இல்லையோ, நிச்சயம் என்னிடம் சொல்வதால் அவர்களுக்கு மன அமைதி கிடைக்கின்றது என்பார். யார் எவ்வளவு தவறு செய்தாலும் மிகவும் பொறுமையுடன் இருந்து வருவார். அவர்கள் செய்யும் தவறினால் மற்றவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று நினைத்தால் மட்டும் மிகவும் அழகாக, நயமாக அவரிடம் எடுத்துக் கூறுவார்.

அநேகமாக அவருடைய உபன்யாசங்களில் நம் மனதில் இருக்கும் சந்தேகங்களுக்குப் பதில் வரும். நாம் தனிமையில் யாருக்கும் தெரியாமல் அந்தரங்கத்தில் செய்துள்ள காரியமும் அவருக்குத் தெரியும் என்பதும் புரிய வரும், உபதேசமாகவும் அது அமையும். லௌகீகமான விஷயங்கள் ஒன்று கூட அவருடைய பிரவசனங்களில் இருக்காது. தான் பேச வந்த விஷயத்தை விட்டு விலகாமல் பேசுவார். அந்த நேரம் கூடியிருக்கும் ரஸிகர்களிடையே முழு நிசப்தம் நிலவும் ஒரு அமைதி சுலபமாக எல்லோருடைய மனதையும் வந்து கவ்விக் கொள்ளும். அதுவே ஒரு சாதனை (த்யானம்) போல் அமையும்.

சில பேரால் உபன்யாசங்கள் மட்டும்தான் செய்ய முடியும். சிலருக்கு பூஜை தான் செய்யத் தெரியும். சிலருக்கு நன்றாக எழுத மட்டும் தான் வரும். சிலருக்குப் பாடல்கள் எழுதத்தான் வரும். சிலருக்குப் பாட மட்டும்தான் வரும். சிலர் கோவில்கள் மட்டும்தான் கட்டுவார்கள். ஆனால் ஸ்ரீ குருஜி உபன்யாசங்கள் அவ்வளவு அருமையாக நிகழ்த்துவார்கள். அவர் பூஜை செய்யும் அழகும், திருமஞ்சனம் செய்யும் அழகும் புஷ்பங்களை அர்ச்சிக்கும் விதமும் பார்ப்பவர்களை மயங்கச்



செய்யும். சொந்தமாக பாடல்களும் எழுதி உள்ளார். ஓரளவு சுமாராகப் பாடவும் செய்வார். கோயில்களும் கட்ட ஏற்பாடுகள் செய்து வருகின்றார். மிகவும் அழகாக எழுதக்கூடிய எழுத்தாற்றலும் உள்ளவர். இத்தனைக்கும் அவர் இவைகள் எதையும் யாரிடமும் கற்றுக் கொண்டதில்லை.

*(தொடரும்)*

**- ஜெயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ குருஜி - 6

ஸ்ரீ குருஜி அவர்கள் சொல்ல, அவரது வாழ்க்கைச் சம்பவங்களைத் தொகுத்து எழுதும் கட்டுரையின் தொடர்ச்சி.

**- எஸ். ஜயராம்**

இப்படியாக, அநேகமாக நான் தியானம் செய்ய ஆசைப்படும் இடங்கள் எல்லாம் அதிஷ்டானமாகவே இருக்கும். கோவிந்தபுரம், வடவாம்பலம் போன்ற இடங்களில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கூறினேன்.

அது போன்று கரூர் அருகில் அமைந்துள்ள **நெரூரில் உள்ள 'சதாசிவ பிரம்மேந்திராள்' அதிஷ்டானத்திற்குச்** சென்று நாள் கணக்கில் தங்குவேன். அப்பொழுதெல்லாம் எப்படி என்றால் இங்கு செல்ல வேண்டும், அங்கு செல்ல வேண்டும் என்று எந்த சங்கல்பமும் இல்லாமல் கிளம்பி Bus Stand செல்வேன். அங்கு என்ன Bus முதலில் வருகின்றதோ அதில் ஏறிச் சென்று விடுவேன். இப்படியாக, ராமேஸ்வரம், கும்பகோணம், குணசீலம், ஸ்ரீ ரங்கம், திருவானைக்கோவில், மன்னார்குடி போன்ற அநேக இடங்களுக்குச் சென்று நாள் கணக்காகத் தங்கி இருந்து விட்டு வருவேன்.

அது மாதிரி நெரூர் சென்று சதாசிவ பிரம்மேந்திராளின் அதிஷ்டானத்திற்குச் சென்று வருவேன், பக்கத்திலேயே அகண்ட காவேரி ஓடும். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். அதிஷ்டானம் அக்ரஹாரத்திலிருந்து தள்ளி வயல் வெளிகளின் நடுவே அமைந்திருக்கும். சேர்ந்தாற் போல் 10 அல்லது 20 நாட்கள் அங்கு தங்கி இருந்து விட்டு வருவேன். காவேரி ஸ்நானமும் பிரும்மேந்திராள் அதிஷ்டான தரிசனமும் மிகவும் ஆனந்தமாக இருக்கும். **ஒரு நவராத்ரி சமயம் அங்கு சென்று 9 நாட்களும் மௌனமாக இருந்து தியானம் செய்துள்ளேன்.**

அப்பொழுது அந்த அதிஷ்டானத்திற்கு தர்சனார்த்திகள் கூட அதிகமாக வரமாட்டார்கள். **கிரஹணை சமயங்களில் அங்கு சென்று காவேரி ஜலத்தில் நின்று கொண்டு கிரஹணக் காலம் முழுவதும் நிறைய ஜபம் செய்து வருவேன்.**



அதிஷ்டானத்திற்கு பக்கத்தில் ஒரு வினாயகர் சன்னதி இருக்கும். அதன் இடுக்கில் உட்கார்ந்து கொண்டு தியானம் செய்து வருவேன். ஒரு சமயம் நான் அங்கு அமர்ந்து தியானம் செய்வது தெரியாமல் கோயில் நிர்வாகத்தைக் கவனித்து வரும் பக்கத்து ஆசிரம நிர்வாகிகள் கதவைப் பூட்டிக் கொண்டு சென்று விட்டார்கள். எனக்கும் அது தெரியாது. பிறகு வெகு நேரம் கழித்து யாரோ சொல்ல, அவர்களாகவே என்னைத் தேடி வந்து எழுப்பிச் சென்றார்கள்.

*(தொடரும்)*

# யுக தர்ம ஸ்தாபகர்கள் - 6

## ஸ்ரீ பகவன்னாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் - தொடர்ச்சி



**ஸ்ரீ** போதேந்திராளும் ஸ்ரீ ஸ்ரீதர ஐயாவாளும் ஸந்தித்துக் கொண்டது இரண்டு மஹா நதிகள் அலைகள் பொங்க ஒன்றோடு ஒன்று மோதிக் கலப்பது போல பரம பவித்ரமாக இருந்தது. ஸ்ரீ போதேந்திராள் யதீச்வரராக இருப்பினும், பரம பாகவதோத்த மரான ஸ்ரீ ஐயாவாளை *'ஈசே தஸ்யச நாமனி ப்ரவிமலம் ஞானம்'* என்ற ஸ்லோகத்தால் அவரது மஹிமையெல்லாம் ஸ்பஷ்டமாகக் கூறி, *'தம் வந்தே நரரூபம் அந்தகரிபும்'* ஸாக்ஷாத் மத்யார்ஜுனேச்வர ரூபியான ஐயாவாளை வணங்குகிறேன், என்கிறார். இதுவே பாகவத ஸம்ப்ரதாயம். **பாகவதர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் வணக்கத்திற்குரியவர்கள். இதில் வர்ணாச்ரமம் முதலிய வேறு எதனாலும் ஏற்றத்தாழ்வு காண வகை இல்லை.**

ஸ்ரீ ஐயாவாள் க்ருஹம் நோக்கி ஸ்வாமிகள் வந்ததுமே பரம ப்ரேமையுடனும் பக்தி வினயத்துடனும் ஸ்வாமிகளை ஸேவித்து கண்ணீர், மெய் சிலிர்ப்பு முதலிய ப்ரேம பாவத்துடன் இருக்கும் ஐயாவாள், தனது தாமரை முகத்திலிருந்து பாகவத ஸம்ப்ரதாயத்தில் ஸுப்ரஸித்தமான இந்த ச்லோகத்தை அருளினார்:-

*''பகவன்னாம ஸாம்ராஜ்ய லக்ஷ்மீ ஸர்வஸ்வ விக்ரஹம் ।*
*ஸ்ரீமத் போதேந்திர யோகீந்திர தேசிகேந்த்ர முபாஸ்மஹே ॥''*

'பகவன்னாம ஸாம்ராஜ்யத்தின் 'ராஜ்யஸ்ரீயே' உருவெடுத்து வந்ததோ எனும்படி பொலிவுடன் விளங்கும் ஸ்ரீ போதேந்திர குருநாதரை ஆச்ரயிக்கிறேன்', என்று கூறி ஸ்ரீ போதேந்திராளை ஜகத்துக்கெல்லாம் குருவான பரமேச்வரனின் உருவாக வந்த ஐயாவாள், குருவாக ஆச்ரயிக்கிறேன் என்று கூறுவதன் மூலம் ஜகதாசார்யனாக போதேந்திராளைப் போற்றுகிறார். **இந்த ச்லோகத்தைத்தான் பாகவத ஸம்பிரதாயத்தில் ஸ்ரீ போதேந்திராளின் த்யானத்திற்கு முக்கியமாகக் கூறுகிறோம்.**

ஸ்ரீ ஸ்வாமிகளை தனது க்ருஹத்தினுள் மிகுந்த பணிவுடன் அழைத்துச் சென்று ஐயாவாள் ஆஸனம் முதலிய உபசாரங்களால் ஆராதித்தார். இவர் ஸ்வயம் சிவபெருமானே என்று உள்ளுக்குள் உணர்ந்திருக்கும் ஸ்ரீ போதேந்திராள், ஸ்ரீ ராகவனோ, ஸ்ரீ க்ருஷ்ணனோ நாரதாதி ஸாதுக்களை இப்படித் தான் உபசரித்திருப்பார்கள் என்று சிந்தித்திருக்கையில் ஐயாவாள் ஸ்வாமிகள் சரணத்தில் பணிந்து நாமோபதேசம் செய்து சிஷ்யனாக ஸ்வீகரித்துக் கொண்டு என்னை க்ருதார்த்த மாக்குங்கள் எனப் ப்ரார்த்திக்க, ஸ்ரீ ஸ்வாமிகளோ நீங்கள் நாம கீர்த்தனபரராகத் தானே இருக்கிறீர்கள். எதற்கு உபதேசம் செய்து கொள்ள வேண்டும் என்றதும் ஸ்ரீ ஐயாவாள் இரு கரங்களையும் குவித்துக் கொண்டு கண்களில் நீர் மல்க எனக்குத் தகுதி இல்லா விட்டாலும் தாங்கள் தயை புரிந்து ஆட்கொள்ள வேண்டும், உபசரிக்கக் கூடாது என்று ப்ரார்த்திப்பதைக் கண்டு ஸ்வாமிகள், அவர் வருந்துவதைக் காண ஸஹியாமல் தன் அருகிலழைத்து நாம ஸூத்ரம் கொடுத்து நாமோபதேசம் செய்தார்.

*(தொடரும்)*

**- பரனூர் ஸ்ரீகாந்த சர்மா**

**சென்னை அகில பாரத ஸாது சங்கம் சார்பில் பரனூர் மஹாத்மா ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப் பிரேமி ஸ்வாமிகளால் நடத்தப்பட்ட ஸம்ஸ்க்ருத ஸம்மேளனத்தில் 28-11-95 அன்று ஸ்ரீ குருஜி ஆற்றிய உரையின் ஒரு பகுதி.**

---

வேதத்தை ஆதாரமாகக் கொண்டது நம்முடைய ஸநாதனமான வைதீக மதம். வேதம் அநாதியானது. அதனால் தான் ஸ்ரீமத் பாகவதத்தின் தியான ஸ்லோகம், பிரம்மாவினுடைய ஹ்ருதயத்தில் வேதமானது ஸ்புரித்தது என்று சொல்கின்றது.

*"தேனே ப்ரும்ம ஹ்ருதாய ஆதி கவயே"*

ஆகவே தெய்வம் இருக்கின்றது என்பதற்கு வேதமே ப்ரமாணம் ஆனதால் நாம் வேதம் காட்டிய வழியில் போனால் தான் அந்த தெய்வத்தை அடையமுடியும். வேதம் முழுவதையும் படித்து அதில் என்ன சொல்லியிருக்கிறது என்று எப்படி தெரிந்து கொள்வது? அதற்காகத் தான் சாஸ்திரங்களை நமக்கு மஹரிஷிகள் கொடுத்துள்ளார்கள்.

உபமானம் காட்டப்படும் விஷயத்தைக் காட்டிலும் உபமேய வஸ்து சிரேஷ்டமாகும். தாமரை போன்ற முகம் என்றால் தாமரை அழகோ இல்லையோ, முகம் மிகவும் அழகாய் உள்ளது என்பதுதானே பொருள். காளிதாஸன் ரகு வம்சத்தில் திலீபனுடைய சரித்திரத்தைச் சொல்லும் பொழுது, திலீபனும் அவனுடைய பத்தினியும் வசிஷ்டர் ஆக்ஞையின்படி காமதேனுவின் குட்டியான நந்தினியை எப்படி ச்ரத்தையுடன் ஸம்ரக்ஷித்து வந்தார்கள் என்பதைச் சொல்லும் பொழுது "எப்படி வேதங்களை ஒட்டியே சாஸ்திரங்கள் செல்கின்றதோ, அது போல நந்தினியை விடாமல் தொடர்ந்து சென்றார்கள்" என்கிறான்.

*"மார்கம் மனுஷ்யேஷ்வர தர்ம பத்னீ ।*
*ஸ்ருதேரிவார்த்தம் ஸ்ம்ருதிரன்வகச்சத் ॥"*

ஆகவே தான் பகவானும் கீதையில்

*"தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே ।*
*கார்யாகார்ய வ்யவஸ்திதௌ ॥"* என்கிறான்.

எந்த கார்யத்தையும் சாஸ்திரத்தைப் பிரமாணமாகக் கொண்டே செய்ய வேண்டும் என்கிறான்.

இப்படி இருக்கையில் ஒரு கால கட்டத்தில் "காரணமும் பொய் கார்யமும் பொய்" என்கிற பௌத்த மதங்களின் சூன்ய வாதமும், மற்ற வேத விரோதமான மதங்களும் வளர ஆரம்பித்தது.

அடுத்ததாக வேதத்தில் இருக்கும் கர்ம காண்டங்களை மட்டும் படித்துக் கொண்டு வெறும் கர்மாக்களையே செய்து கொண்டும், கர்மாக்களுக்கே ஸ்வயமாக பலன் தரக்கூடிய சக்தி உண்டு, ஈஸ்வரன் என்பவர் இல்லை என்று வாதாடும் வரட்டு கர்மடர்கள் அதிகமாக இருந்தார்கள். தெய்வத்தை ஏற்று பக்தி செய்பவர்களும் எந்த ஸ்வாமி பெரியவர் என்ற வாதங்களில் ஈடுபட்டார்கள். சைவ வைஷ்ணவ சண்டைகள் இப்படி இருக்கையில் ஸனாதனமான மதத்தில் பற்று கொண்டுள்ள ஜனங்கள் நிலை புரியாமல் தவித்தார்கள். அது மாதிரியான கால கட்டத்தில் தான் சங்கர பகவத்பாதாள் அவதாரம் செய்து ஆத்மா க்ஷணிகம் என்று கூறிவந்த பௌத்தர்களைக் கண்டித்து ஆத்மா ஸத்யமான வஸ்து என்பதை ஸ்தாபித்தார். கர்மாக்கள் ஜடம். கர்மாக்களுக்கு ஸ்வயமாக பலன் தரக்கூடிய சக்தி கிடையாது பலதாதாவாக பகவான் ஒருவர் உண்டு என்று அவர்களை ஒரு நெறிப்படுத்தி, சைவ வைஷ்ணவ சண்டைகளை நிறுத்த எந்த தெய்வத்துக்கும் பரதத்வம் சொல்லாமல் நிர்குணமான ப்ரும்மத்தை ஸ்தாபித்தார். ஆசார்யாள் காலத்திற்கு முன்பு

இருந்த துர் மதங்களை எல்லாம் அழித்து வைதீக மதத்தை நெறிப்படுத்தி அத்வைத மதத்தை ஸ்தாபித்தார். ஜகத்குரு என்ற பட்டம் ஒரு ஸம்ப்ரதாயமான வார்த்தை இல்லை.

தன்னுடைய காலத்தில் அத்வைத மதம் மட்டுமே இருக்கும்படியாக செய்து விட்டதால் ஜகத்குரு என்பது யதார்த்தமான ஸத்யம். **ஆசார்யாள் என்றாலே சங்கரரைத்தான் குறிக்கும்.** ஸ்ரீ அண்ணா அவர்கள் சங்கரரின் பாஷ்ய க்ரந்தங்களை எல்லாம் ஆராய்ந்து சங்கரரின் ஹ்ருதயம் ஹரி பக்தி செய்வதே என்பதை ஸ்தாபித்துள்ளார்கள். அந்த க்ரந்தத்திற்கு பகவத் பாத ஹ்ருதயமோ, சங்கர ஹ்ருதயமோ பெயரில்லை. ஆசார்ய ஹ்ருதயம் என்றே பெயர் உள்ளதால் ஆசார்யாள் என்றாலே சங்கரர் தான் என்பதாகி விட்டது.

பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் போன்ற ஸ்லோகங்களிலும் ஸஹஸ்ரநாம பாஷ்யத்திலும் ஆசார்யாள் பகவந் நாம மஹிமையை எடுத்துச் சொல்லியிருந்தாலும், ப்ரத்யேகமாக நாம கீர்த்தனம் ஒன்றே ஜனங்களை கலி யுகத்திலிருந்து ரக்ஷிக்கக் கூடியது என்று நாம ஸித்தாந்தம் செய்ய விரும்பினார். ஆனால் அதை, தானே மீண்டும் போதேந்திர ஸ்வாமிகளாக வரும் பொழுது செய்து கொள்ளலாம் என்று விட்டு விட்டார்.

**ஆதி சங்கர பகவத் பாதாளேதான் மீண்டும் போதேந்திர ஸ்வாமிகளாக வந்தார்.**

காஞ்சியில் மண்டனமிச்ரர் அக்ரஹாரத்தில் மோஹன பாண்டுரங்க யோகி, ஸுகுணாதேவி தம்பதிகள் சிஷ்டா சாரத்துடன் ஆசார்ய கைங்கர்யம் செய்து கொண்டு சந்தோஷ மாக இருந்து வந்தார்கள். அக்காலத்தில் ஆத்ம போதேந்திர ஸ்வாமிகள் காமகோடி பீடத்தை அலங்காரம் செய்து வந்தார்கள். மோஹன பாண்டுரங்க யோகியின் கைங்கர்யத்தினால் ப்ரீதியடைந்த ஆசார்ய ஸ்வாமிகள், வெகு நாளாக புத்ர ப்ராப்தி

இல்லாமல் இருக்கும் அவருக்கு சீக்கிரம் ஸத் ஸந்தானம் பிறக்கும் என்று அனுக்ரஹித்தார்கள்.

அது போலவே அத்தம்பதியருக்கு க்ருஷ்ண விக்ரஹம் போன்று மிகவும் அற்புதமான குழந்தை பிறந்தான். அவனுக்கு புருஷோத்தமன் என்று திருநாமம் சூட்டப்பட்டது. தகப்பனாருடன் ஒரு நாள் மடத்திற்கு வந்த குழந்தையைப் பார்த்து சந்தோஷமடைந்த ஸ்வாமிகள் குழந்தைக்கு சீக்கிரமே உபநயனம் செய்வித்து வித்யாப்யாஸம் செய்விக்கும்படி அருளினார்கள். பிறகு ஸ்வாமிகள் க்ஷேத்ர யாத்திரையாக காசி க்ஷேத்ரம் சென்று விட்டார்கள்.

குரு நாதருடைய பிரிவைத் தாளாமல் தவித்த புருஷோத்தமன் தன்னுடைய ஸ்னேகிதன் ஞான ஸாகரன் என்பவனுடன் சேர்ந்து காசி நோக்கிப் புறப்பட்டான். வழியில் யாருக்காவது ஒருவருக்கு பிராண வியோகம் ஏற்படுமானால் மற்றவர் ஆசார்யாளை காசியில் தரிசனம் செய்து விட்டு ஆத்மஹத்தி செய்து கொண்டு விட வேண்டியது என்று பிரதிக்ஞை செய்து கொண்டார்கள். அது போலவே ஞான ஸாகரனுடைய ஆயுள் முடிந்து விடவே, புருஷோத்தமன் மட்டும் காசி சென்று ஸ்வாமிகளை தரிசனம் செய்து விட்டு எல்லா விருத்தாந்தங்களையும் அவரிடம் தெரிவித்தான். உடனே ஸ்வாமிகள் ''புருஷோத்தமா, பண்ணின ப்ரதிக்ஞையைக் காப்பாற்ற வேண்டியதுதான். ஆனால் உன்னால் பல கோடி ஜன்மங்கள் உத்தாரணம் ஆக இருக்கின்றார்கள். ஆகவே உனக்கு நான் ஸன்யாசாச்ரமம் தருகின்றேன். சன்யாசம் வாங்கிக் கொண்டால் அது மறு பிறவிக்கு சமம். ஆகவே, உன்னுடைய பிரதிக்ஞையும் காப்பாற்றினால் போல் ஆகும். என்னுடைய மனோ ரதமும் பூர்த்தியாகும்'' என்று கூறி பகவன்னாம போதேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்ற தீக்ஷா நாமத்துடன் மஹா ஸன்யாசம் கொடுத்தார்.

*(தொடரும்)*

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 6

(பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் அருணாசல அக்ஷர மண மாலை - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸத்திலிருந்து சில பகுதிகள் - தொடர்ச்சி)

**ஸ்ரீ** சேஷாத்ரி ஸ்வாமிகள் வம்சம் எப்படிப்பட்டது என்றால், காமகோடி வம்சம் என்றே பெயர். ஸ்ரீ ஆச்சார்யாள் காஞ்சிபுரத்திலே ஸ்ரீ வித்யா பூஜையை ஏற்பாடு பண்ணி, நர்மதா நதி தீரத்திலிருந்து ஒரு முப்பது குடும்பங்களை இங்கே குடியமர்த்தினார். **அப்பேர்ப்பட்ட குடும்பத்திலிருந்து வந்தவர் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்.** அவர் ஜனனம் எப்படி என்றால் அவர் தாத்தா 'காமகோடி சாஸ்திரிகள்' என்று பெயர் தன்னுடைய பெண் மரகதத்தை தன்னிடம் வேத அத்யயனம் பண்ணின பையனுக்கே கல்யாணம் பண்ணி வைத்தார். ரொம்ப நாளாக புத்ர சந்தானம் ஏற்படவில்லை.

காமகோடி சாஸ்திரிகளே பெரிய மஹாத்மா, கடைசியாய் சன்யாஸம் வாங்கிண்டு, ஸ்ரீ வரதராஜ ஸ்வாமி கோவிலில் இருந்தவர் - ஸ்ரீ காமாட்சியிடம் பிரார்த்தனை பண்ணினார். காமாட்சி அவர் சொப்பனத்தில் ஆக்ஞை பண்ணினாள். ''உன்னுடைய கையினாலே அவளுக்கு வெண்ணையைக் கொடு, குழந்தை பிறக்கும்'' என்றாள். சாஸ்திரிகளும் காமாட்சியின் பிரேரணைனாலே அவ்வாறே வெண்ணெயை எடுத்துக் கையில் கொடுக்க, ஒரு ஆச்சரியமான ஸந்தான ப்ராப்தி ஏற்பட்டது. அது தான் சேஷாத்ரி ஸ்வாமிகள். பார்ப்பதற்கு குழந்தை ஸ்ரீ க்ருஷ்ண விக்ரஹம் மாதிரி இருப்பார். குழந்தை பிறந்ததிலிருந்த தனியாக தியானத்தில் உட்காருவார், சின் முத்ரைகள் காண்பித்துக் கொண்டிருப்பார். பத்மாசனம்

போட்டு உட்காருவார். தாத்தா பல ஊர்களுக்குச் சென்று ராமாயணம் பாகவதம் போன்ற ப்ரவசனங்கள் பண்ணினார் என்றால், அதை ஒரு தரம் கேட்டுவிட்டு, திருப்பி எல்லாருக்கும் அப்படியே சொல்வார். காமாட்சி மேலே மூக 'பஞ்சஸ்ததி'ன்னு ஒரு ஸ்லோகம் இருக்கு. 500 ஸ்லோகங்கள் பக்தியும் வேதாந்த ரஸமும் சொட்டச் சொட்ட இருக்கும். அந்த ஸ்லோகத்தை இந்தக் குழந்தை மனனம் பண்ணி காமாட்சியம்மனுடைய கோயிலுக்குப் போய் நூற்றுக்கணக்கில் பிரதக்ஷிணம் பண்ணி அம்பாள் முன்னாடி கதறியழுது கொண்டே இருப்பார். பதிமூன்று வயது கூட குழந்தைக்குப் பூர்த்தியாகலை. எப்பப் பார்த்தாலும் தனிமையிலே ஏகாந்தத்திலே ஜபம், தியானம் செய்து கொண்டிருப்பார்.

அப்படியே விரக்தராகவும் இருந்திருக்கையில் சர்வ தீர்த்தக் கரையில் **பாலாஜி சுவாமிகள்** என்ற சுவாமிகள் காசி க்ஷேத்திரத்திலிருந்து வந்தார். இந்தக் குழந்தை அவரிடம் கைங்கர்யம் பண்ணிக் கொண்டிருந்தார். ஏகாம்பரேஸ்வரர் கோயில் குளத்திலே பலவிதமான மந்த்ரங்களை ஜபம் செய்து கொண்டு, காமாட்சி அம்மனை பிரதக்ஷிணம் செய்து, விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்து, வரதராஜரைப் போய் தரிசனம் செய்து கொண்டிருப்பார்.

இப்படியிருக்கையில் அவருடைய தாயாரானவள், வரதராஜ ஸ்வாமி கோயில் உத்ஸவத்திற்கு இந்தக் குழந்தையை அழைத்துக் கொண்டு போகிறாள். ஒருத்தன் ஒரு சாக்குல நிறைய கிருஷ்ண விக்ரஹங்களை வைச்சு வித்திண்டிருக்கான். அந்த விக்ரஹங்களைப் பார்த்து அந்தக் குழந்தைக்கு ஆசை ஏற்பட்டு, அம்மாகிட்டே கேட்கிறார், 'அம்மா எனக்கு ஒரே ஒரு கிருஷ்ண விக்ரஹம் வாங்கித் தர்றயா!ன்னு அவர் அம்மா சொல்கிறார், 'கையில காசு எடுத்துண்டு வரலைடா, குழந்தை! நாளைக்கு வாங்கிக்கலாம்'ன்னு. ஆனால் அந்தக் கடைக்காரனோ அந்தக் குழந்தையினுடைய லாவண்யத்திலே மயங்கி, குழந்தே! நீயே உன் குஞ்சுக் கையை உள்ளே விட்டு கிருஷ்ண விக்ரஹம் ஒன்று

எடுத்துக் கொள் என்கிறான். அந்த குழந்தை அப்படியே கிருஷ்ண விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு வந்து - இன்றைக்கும் அவாளுடைய சந்ததியிலே இருக்கறவாகிட்டே அந்த கிருஷ்ண விக்ரஹம் இருக்கு - அதிலே பூஜை பண்ணின்டிருக்கார். மறு நாள் உத்ஸவத்திற்கு தாயார் அந்தக் குழந்தையை அழைச்சுண்டு போகிறாள், அந்தக் கடைக்காரன் அந்தக் குழந்தையின் காலிலே விழுந்து நமஸ்காரம் பண்றான். 'அம்மா! **இந்தக் குழந்தை சாதாரண குழந்தை இல்லை;** நானும் இதுவரை எத்தனையோ உத்ஸவங்களுக்கு பொம்மைகள் எடுத்துண்டு போயிருக்கேன். ஒரு பத்து பொம்மை விற்றால் கூட ரொம்ப துர்லபம். நேற்றைக்கு அத்தனை பொம்மையும் வித்துப் போயிடுத்தும்மா. இது சாதாரண குழந்தையாய் தெரியலை. அப்படின்னு குழந்தையோட கையை எடுத்து, **'தங்கக் கை' சேஷாத்ரி'**ன்னு சொல்றான்.

இதற்குள் குழந்தையின் தகப்பனார் காலமாயிட்டார். தாயார் மட்டுமிருக்கிறார். காலா காலத்திலே குழந்தைக்கு விவாஹம் பண்ணிவைக்கணுமின்னு தாயார் ஆசைப்படுகிறார். ஜோசியாள்கிட்டே ஜாதகத்தைக் காண்பிச்சா, இந்தக் குழந்தைக்கு விவாஹம் பண்றா மாதிரியில்லே! சன்யாஸ யோகம் தான் இருக்கு என்கிறார்கள். இதனால் இவர் தாயார் அகத்திலேயிருந்து கொண்டு, துறவு கோலம் பூண்டு, நித்யம் ஒரு வேளை ஆகாரம் எடுத்துண்டு, எப்பப் பார்த்தாலும் நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டு, வீணா கானம் மற்றும் துளஸி பூஜை செய்து கொண்டு விரக்தியா வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இந்தக் குழந்தை அகத்துக்கு சரியாக வருவதில்லை. ராத்திரியெல்லாம் மயானத்துலே போய் ஜபம், தியானம் செய்கிறார். கடைசியாக அந்தத் தாயாருக்கும் அந்திம கதி ஏற்பட்டது. குழந்தையைக் கூப்பிட்டு மடியிலே தலையை வைத்துக் கொண்டு, குழந்தையைப் பார்த்து **'ஸ்மரணேன முக்தி அருணாசலம்'**ன்னு சொல்லிருக்கு. அந்திம காலத்திலே யாருக்கு

அருணாசலத்தினுடைய ஸ்மரணை ஏற்படறதோ அவர்களுக்குத் திரும்பி புனராவர்த்தி இல்லைன்னு சொல்லி இருக்குப்பா. அதனாலே எனக்கு மறந்து போயிட்டாக்கூட நீ ஞாபகப்படுத்து. என்னுடைய காதுலே **'அருணாசலம்! அருணாசலம்! அருணாசலம்!**-ன்னு சொல்லிண்டேயிரு என்று சொல்லி **'ஸத் ஸங்கத்வே நித் ஸங்கத்வம்'** என்ற ஆச்சார்யாளுடைய ஸ்லோகத்தை ஸ்மரிச்சுண்டு அந்தத் தாயார் காலமாயிட்டாள்.

இந்தக் குழந்தைக்கு தாயாரிடமிருந்து அருணாசலத்தோட உபதேசம் ஆனவுடன், அருணாசலத்துக்குப் போகணும்னு ஆசை வந்துவிட்டது. தன்னுடைய தியானத்தினாலே தரிசனம் பண்ணின அருணாசல மலையை - கிரியை - சின்ன ஒரு படமா எழுதி அகத்திலே வைத்து, பூஜை செய்து கொண்டு நித்யம் கார்த்தாலே கதவை சாத்திண்டா, 2 மணி 3 மணி நேரமாகும். அகத்திற்கு சரியாக வருவதில்லை. இப்படி ரோடுல போயிண்டு வந்திண்டிருக்கார். (சேஷாத்ரி ஸ்வாமிகள் பாலாஜி ஸ்வாமிகளிட மிருந்து சன்யாஸம் வாங்கிண்டதாக ஒரு சரித்திரம் கூட இருக்கு. ஆனால் ஸ்வாமிகளோட எந்தப் படத்தைப் பார்த்தாலும் தண்ட கமண்டலத்தோடு கூடிய அவருடைய போட்டோ கிடைக்கலை. சாதாரண அவதூத நிலையிலிருக்கிற, அதியாஸ்ரமியா இருக்கற படங்களைத் தான் நிறையப் பார்க்கிறோம்.)

அவ்வாறிருக்கையில் அவர் தகப்பனர்ருக்கு பண்ண வேண்டிய சிரார்த்தம் வருகிறது. இவர் சித்தப்பா, சித்தி குழந்தையைக் கூப்பிட்டு, ''மறு நாளைக்கு சிரார்த்தம்பா! நீ அகத்துக்கு சீக்கிரம் வந்துடு. காலா காலத்துல ஸ்நானம் பண்ணனும். வைதீகாளெல்லாம் வருவார்கள்'' என்றனர். அதற்கு ஸ்வாமிகள் ''நான் நைஷ்டிக ப்ரம்மச்சாரி. எனக்கு இந்த நீதியெல்லாம் கிடையாது'' என்கிறார். நிர்ப்பந்தப்படுத்து கிறார்கள். இந்தக் குழந்தை எங்கயாவது கார்த்தாலே ஜபம் தியானம்னு அகத்தை விட்டுட்டு போயிடுமோன்னு நினைச்சிண்டு, ஒரு ரூம்ல குழந்தையை வைத்து பூட்டிவிட்டு, வைதீகாளெல்லாம் ச்ரார்த்தம் பண்ண வரும்போது, திறந்து

விடலாம்னு நினைத்து, 9, 10 மணிக்குக் கதவைத் திறந்து பார்த்தால், குழந்தையை உள்ளுக்குள்ள காணும். அப்பவே தன்னை மறைத்துக் கொண்டு வெளியில போகக் கூடிய யோக சித்தி, 13 வயசு கூட ஸ்வாமிக்குப் பூர்த்தியாகலே. அப்பேர்ப்பட்ட மஹாத்மா.

திரும்பி எங்கே கிளம்பி போய்விட்டார் என்றால், அருணாசலத்துக்கு வந்துட்டார். **ஞானத் தபோதனரை வா என்று அழைக்கும் மலையாம், அருணாசலம்.** அப்படியென்றால், யார் ஞானிகளாய் இந்த மலைக்கு வருகிறார்களோ, அவர்களைத் தன்னிடமிருந்து திருப்பி விடறதில்லையாம் இந்த மலை. இதுக்கு பிரமாண மேனிக்கு பார்த்தால், **நம்ம பகவான் வந்து வெளியிலே போகலே, சேஷாத்ரி ஸ்வாமிகள் போகலே. அநேக மஹாத்மாக்கள் அப்படியே அங்கேயே மயங்கி இருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட க்ஷேத்ரம் அருணாசலம்.**

குழந்தை சேஷாத்ரி ஸ்வாமிகள் திருவண்ணாமலைக்கு வந்து இங்கெல்லாம் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறார். ஸ்வாமிகளுடைய சக்தி எப்படி என்றால் அப்படி கையைத் தட்டினால் ஆயிரம் கருட பட்சி வரும். இப்படி கையைத் தட்டினால் ஆயிரம் மயில் வரும். அவர் பாட்டுக்கு பித்தனென்றும் பேயனென்றும் - ஞானிகளுடைய நிலையை சொல்வார்கள் இல்லையா - அப்படி ரோட்லே எல்லாம் சஞ்சாரம் செய்து கொண்டு, பாட்டுப் பாடிக்கொண்டு, தனக்குத் தானே ஏதோ பேசிக் கொண்டு சென்று கொண்டிருப்பார். ஜனக் கூட்டத்தையே வெறுத்தவர், விரக்தர், ஜனங்கள் பார்க்காத இடமாக சஞ்சாரம் செய்து கொண்டிருந்தார்.

*(தொடரும்)*

*தொகுப்பு :* **ஸ்ரீ முரளீதர தாஸன்**

---

**அறிவிப்பு : 1**

பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் 'அருணாசல அக்ஷர மண மாலை' - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸக் கேஸட்டுகள் ப்ரேமிக பவனில் விலைக்குக் கிடைக்கும்.

# ப்ரச்நோத்தர ரத்நமாலிகா

(ப்ரச்நம் : கேள்வி. உத்தரம் : பதில். வினா-விடைத் தொடராக மணியான கருத்துக்களைக் கோர்த்துத் தருவதால் இந்நூல் ''ப்ரச்நோத்தர ரத்நமாலிகா'' எனப்படுகிறது.)

**க: க²லு நாலங்க்ரியதே**
**த்ருஷ்டாத்³ருஷ்டார்த²ஸாத⁴நபடீயாந் ।**
**அமுயா கண்ட²ஸ்தி²தயா**
**ப்ரச்நோத்தர ரத்நமாலிகயா ॥** 1

இஹபர ச்ரேயஸ்ஸை அடைய சாமர்த்தியமுள்ள யார் தாம் இந்த ப்ரச்நோத்தர ரத்நமாலிகையைக் கழுத்திலே கொண்டு (அதாவது இதை ஓதி) இதனால் அலங்கரிக்கப்படவில்லை?

(இம்மை மறுமை நலன்களைப்பெற விரும்புபவர் 'ப்ரச்நோத்தர ரத்ந மாலிகை'யை ஓதி உணர்ந்தால் பயனுறுவர் என்பத கருத்து. மனப்பாடம் செய்து ஒப்பிப்பதை 'கழுத்தில் கொள்வது' ('கண்டஸ்தம்') என்பர். மாலையையும் கழுத்தில் தானே அணிவர்?)

**ப⁴க²வந் கிமுபாதே³யம்?**
**கு³ருவசநம். ஹேயமபிச கிம்? அகார்யம் ।**
**கோ கு³ரு:? அதி⁴க³ததத்வ:,**
**சிஷ்யஹிதாயோத்³யதஸ் ஸததம் ॥** 2

கே:- ஸ்வாமி, கிரகித்துக்கொள்ளவேண்டியது என்ன?
ப:- குரு வசனம்.

கே:- தள்ளவேண்டியது என்ன?
ப:- அகார்யம். (செய்யத்தகாதது. அதாவது செய்யத்தகாதது என குரு கூறுபவை.)

கே:- குரு யார்?
ப:- உண்மையை அறிந்தவர். தம்மை அண்டின சிஷ்யர்களின் க்ஷேமத்துக்காக இடைவிடாமல் பாடுபடுபவர்.

**த்வரிதம் கிம் கர்தவ்யம்**
**விது3ஷாம்? ஸம்ஸார ஸந்ததிச்சே2த3: ।**
**கிம் மோக்ஷதரோர் பீ3ஜம்?**
**ஸம்யக்3 ஜ்ஞாநம் க்ரியாஸித்3த4ம் ॥** 3

கே:- அறிவுள்ளவன் துரிதமாகச் செய்யவேண்டியது என்ன?

ப:- ஸம்ஸாரத் தொடரைக் கத்தரித்தல் (செத்துச் செத்துப் பிறக்காமல் மோக்ஷமடைவது).

கே:- மோக்ஷ மரத்துக்கு விதை எது?

ப:- உள்ளதை உள்ளபடி அறிந்து (ஸத்ய தத்வ ஞானம் பெற்று) காரியத்தில் காட்டுவது

**க: பத்4யதரோ? த4ர்3ம:**
**க: சுசிரிஹ? யஸ்ய மாநஸம் சுத்3த4ம் ।**
**க: பண்டி3தோ? விவேகீ**
**கிம் விஷம்? அவதீ4ரணா கு3ருஷு ॥** 4

கே:- எது பத்தியம்? (ஹிதமானது)

ப:- தர்மம்.

கே:- இங்கு (இவ்வுலகில்) எவன் சுத்தன்?

ப: எவன் மனம் சுத்தமாக இருக்கிறதோ அவன்.

கே: எவன் பண்டிதன்?

ப: விவேகி. (விவேகத்தையுடையவன். நித்யமான ஆத்மா எது? அநித்யமான பிற யாவை? என்ற பாகுபாடு அறிவதே விவேகம்.)

கே:- எது விஷம்?

ப:- பெரியோர் வார்த்தையை அலட்சியம் செய்வது.

**கிம் ஸம்ஸாரே ஸாரம்?**
**ப3ஹுசோ(அ)பி விசிந்த்யமாநமித3மேவ ।**
**கிம் மநுஜேஷ்விஷ்டதமம்?**
**ஸ்வபரஹிதாயோத்3யதம் ஜந்ம ॥** 5

கே:- ஸம்ஸாரத்தில் ஸாரம் எது?
ப:- அடிக்கடி இதை நினைத்துக்கொண்டிருப்பதே. (ஸம்ஸாரத்தில் ஸாரம் எது என்று ஆராய்ந்துகொண்டே இருப்பதனால் அதில் பற்றுவிட்டுப் பிறப்பறுக்கலாம்.)

கே:- மனிதர்கள் விரும்பத் தக்கதில் தலை சிறந்தது எது?
ப:- தான், பிறர் இரண்டு பேரின் க்ஷேமத்திற்காகவும் ஈடுபடும் ஜன்மம்.

**மதி$^3$ரேவ மோஹஜநக:**
**க:? ஸ்நேஹ: கே ச த$^3$ஸ்யவோ? விஷயா: ।**
**கா ப$^4$வவல்லீ? த்ருஷ்ணா,**
**கோ வைரீ? யஸ்த்வநுத்$^3$யோக$^3$: ॥** 6

கே:- கள்போல் மயக்கத்தை உண்டு பண்ணுவது எது?
ப:- பற்றுதல், (ஆசை, சிநேகம், 'சிநேகம்' என்றால் எண்ணெய்போல் ஒட்டிக் கொள்ளுதல்.)

கே:- ஸம்ஸாரக் கொடி எது?
ப:- (தாஹம் போன்ற) ஆசை வேட்கை.

கே:- சத்துரு யார்?
ப:- சோம்பேறித்தனமே.

**கஸ்மாத் ப$^4$யமிஹ? மரணாத்,**
**அந்தா$^4$தி$^3$ஹ கோ விசிஷ்யத ராகீ$^3$ ।**
**க: சூரோ? யோ லலநா**
**லோசநபா$^3$ணைர் ந ச வ்யதி$^4$த: ॥** 7

கே:- இங்கு (உலகில்) எல்லோரும் பயப்படுவது எதனிடம்?
ப: மரணத்தினிடம்.

கே: குருடனைக் காட்டிலும் குருடன் யார்?
ப:- ஆசையுள்ளவன்.

கே:- சூரன் யார்?
ப:- ஸ்தீரிகள் பார்வைகளான பாணங்களால் அடிபடாதவன்.

**பாதும் கர்ணாங் ஜலிபி$^{4}$:**
**கிமம் ருதமிஹ யுஜ்யதே? ஸது$^{3}$பதே ச: ।**
**கிம் கு$^{3}$ருதாயா மூலம் ?**
**யதே$^{3}$ததத்ப்ரார்த$^{2}$நம் நாம ॥** 8

கே:- காதாகிய அஞ்சலி (செவியின் கேள்விக் குழாய்க்கு அஞ்சலி என்று பெயர். இரண்டு கைகளையும் சேர்த்துக் குவித்துக் கொள்வதுபோலக் காது குவிந்திருப்பதனால் அஞ்ஜலி எனப்படுகிறது.)யால் சாப்பிடக்கூடிய அமிருதம் எது?

ப:- ஸாதுக்களுடைய உபதேசம்.

கே:- மதிப்புக்கு மூலம் எது?

ப:- ஒருவனிடமும் எதையும் வேண்டாதிருத்தல்.

**கிம் க$^{3}$ஹநம்? ஸ்த்ரீ சரிதம்,**
**க: சதுரோ? யோ ந க$^{2}$ண்டிதஸ் தேந ।**
**கிம் து:க$^{2}$ம்? அஸந்தோஷ:,**
**கிம் லாக$^{4}$வம்? அத$^{4}$மதோ யாச்ஞா ॥** 9

கே:- மர்மமானது எது?

ப:- பெண்களின் நடத்தை

கே:- ஸமர்த்தன் யார்?

ப:- (பெண்களின் நடத்தையினால்) இதனால் வஞ்சிக்கப்படாதவன்.

கே:- துக்கம் யாது?

ப:- திருப்தியின்மை.

கே:- கீழ்மை யாது?

ப:- கீழ்ப்பட்டவனிடத்தில் யாசிப்பது.

**கிம் ஜீவிதம் ? அநவத்$^{3}$யம்,**
**கிம் ஜாட்$^{3}$யம்? பாட$^{2}$தோ(அ)ப்யநப்$^{3}$யாஸ: ।**
**கோ ஜாக$^{3}$ர்தி? விவேகீ,**
**கா நித்$^{3}$ரா? மூட$^{4}$தா ஜந்தோ ॥** 10

கே:- (உயர்ந்த) ஜீவனம் யாது?
ப:- குற்றமின்மை (மாசு இல்லாத நடத்தை)

கே:- அறிவின்மை யாது?
ப:- கற்றதையும் (நடைமுறையில்) பழகாமலிருத்தல்.

கே:- விழிப்புடையோன் எவன்?
ப:- விவேகமுள்ளவன்

கே:- உறக்கம் யாது?
ப:- ஜீவர்களது மூடத்தன்மை.

**நலிநீத$^{3}$லக$^{2}$தஜலவத்**
**தரலம் கிம்? யௌவநம் த$^{4}$நம் சாயு: ।**
**கத$^{2}$ய புந: கே சசிந:**
**கிரணஸமா:? ஸஜ்ஜநா ஏவ ॥** 11

கே:- தாமரையிலைத் தண்ணீர்போல நிலையில்லாதவை எவை?
ப:- இளமை, செல்வம், ஆயுள் என்பன.

கே:- சந்திரகிரணம் போன்றவர் (பிறருக்கு ஹிதம் செய்பவர்) யார் எனச் சொல்லவும்.
ப:- நன்மக்களே.

**கோ நரக:? பரவசதா,**
**கிம் ஸௌக்$^{2}$யம்? ஸர்வ ஸங்க$^{3}$விரதிர் யா ।**
**கிம் ஸாத்$^{4}$யம்? பூ$^{4}$தஹிதம்,**
**ப்ரியம் ச கிம்? ப்ராணிநாம் அஸவ: ॥** 12

கே:- நரகம் யாது?
ப:- பிறர் வசமாயிருத்தல்.

கே:- ஸௌக்கியம் யாது?
ப:- ஸர்வஸங்க பரித்யாகம். (எல்லாத் தொடர்புகளையும் துறப்பது)

கே:- ஸாதிக்கத்தக்கது யாது?

ப:- ஜீவர்களுக்கு ஹிதம் செய்தல்

கே:- பிராணிகளுக்கு பிரியமுள்ளது யாது?

ப:- பிராணன்.

**கோ(அ)நாத2ப2லோ? மாந:,**
**கா ஸுகதா? ஸாது4ஜநமைத்ரீ ।**
**ஸர்வவ்யஸநவிநாசே**
**கோ த3க்ஷ:? ஸர்வதா3 த்யாகீ3 ॥** 13

கே:- எது அநர்த்தத்தைத் தரும்?

ப:- மானம் (மானாபிமானமான அஹம்பாவம்)

கே:- எது ஸுகத்தைத் தரும்?

ப:- நல்ல மனமுள்ளவர்களின் சிநேகம் (ஸத் ஸங்கம்)

கே:- எல்லாத் துக்கத்தையும் தொலைப்பதில் எவன் கெட்டிக்காரன்?

ப:- யாவற்றையும் தியாகம் செய்பவன்.

**கிம் மரணம்? மூர்க2த்வம்,**
**கிம் சாநர்க4ம்? யத3வஸரே த3த்தம் ।**
**ஆமரணாத் கிம் சல்யம் ?**
**ப்ரச்ச2ந்நம் யத் க்ருதம் பாபம் ॥** 14

கே:- மரணம் எது?

ப:- அறிவின்மை

கே:- விலை மதிக்கவொண்ணாதது எது?

ப:- ஸமயத்தில் செய்யும் தானம் (உதவி)

கே:- சாகும்வரையில் (ஈட்டிபோல்) குத்துவது எது?

ப:- ரகஸ்யத்தில் செய்த பாபம்.

**குத்ர விதே4யோ யத்நோ?**
**வித்3யாப்4யாஸே,ஸதௌ3ஷதே4 தா3நே ।**
**அவதீ4ரணா க்வ கார்யா?**
**க2லபரயோஷித்பரத4நேஷு ॥** 15

கே:- எதற்காகப் பிரயத்தனம் செய்யவேண்டும்?

ப:- வித்தியாப்பியாஸம், நல்ல மருந்து, தானம் செய்தல் இவற்றுக்காக

கே:- அலக்ஷ்யம் செய்யவேண்டியது எது?

ப:- கெட்டவர்கள்; பிறருடைய மனைவி; பிறருடைய பொருள்.

**கோ(அ)ஹர்நி சமநுசிந்த்யா?**
**ஸம்ஸாராஸாரதா, ந து ப்ரமதா[3] ।**
**கா ப்ரேயஸீ விதே[3]யா?**
**கருணா தீ[3]நேஷு ஸஜ்ஜநே மைத்ரீ ॥** 16

கே:- இராப்பகல் நினைக்கவேண்டியது எது?

ப:- ஸம்ஸாரத்தில் சாரம் இல்லை என்பது. பெண்ணல்ல.

கே:- பிரியமாகச் செய்யவேண்டியது எது?

ப:- தீனர்களிடத்தில் கருணையும், ஸாதுக்களிடத்தில் சிநேகமும்.

**கண்ட[2]க[3]தைரப்யஸுபி[4]:**
**கஸ்ய ஹ்யாத்மா ந சக்யதே ஜேதும் ।**
**மூர்க்[2]ஸ்ய சங்கிதஸ்ய ச**
**விஷாதி[3]நோ வா க்ருதக்[4]நஸ்ய ॥** 17

கே:- பிராணன் போவதாக இருந்தாலும், எவனுடைய ஆத்மாவை நல்வழிப்படுத்த முடியாது?

ப:- அறிவீனன், சந்தேக ப்ராணி, அழுமூஞ்சி, நன்றியில்லாதவன் ஆகியவர்கள்.

*(தொடரும்)*

---

அறிவிப்பு : 2

சந்தாதாரர்கள், மதுரமுரளி இதழுக்குக் கடிதம் எழுதும்போது, தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கீழ்க்கண்ட விலாஸத்திற்கு விவரம் எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**மதுரமுரளி, வி. சங்கரன் (தொலைபேசி எண் 4840527), 5/3, MIG Flats, பி.டி. ராஜன் ரோடு, கே.கே. நகர், சென்னை-78.**

# செய்திகள்

### டிசம்பர் 5-ந்தேதி முதல் 10-ந்தேதி வரை

ஸ்ரீ குருஜி சென்னையிலிருந்து புறப்பட்டு, ஹைதராபாத் சென்றார். அங்கிருந்து, பண்டரீபுரம் ஸ்ரீ பாண்டுரங்கனை தரிசனம் செய்துவிட்டு, சஜ்ஜன்காட், ஸதாரா, மஹாபலேஸ்வரர் க்ஷேத்திரங்கள் வழியாக பம்பாய் வந்தடைந்தார். அங்கிருந்து 'தேஹு ரோடு' வந்து, ஸ்ரீ துக்காராம் அவர்கள் ஸஸரீரத்துடன் வைகுண்டம் எழுந்தருளிய இடத்தைத் தரிசனம் செய்துகொண்டு, அங்கு ***'ஸ்ரீ துக்காராம் சரித்திரம்'*** பற்றி உபன்யாஸமும் செய்து மீண்டும் ஹைதராபாத் வழியாக சென்னை வந்தடைந்தார்.

❀ ❀ ❀

### டிசம்பர் 20-ந் தேதியன்று

ஸ்ரீ மஹா பெரியவாளின் அனுராதா நட்சத்திரத்தன்று சென்னை ப்ரேமிக பவனில் பிரம்மஸ்ரீ எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் ***"அத்வைத ஸித்தி" - வாக்யார்த்த ஸதஸ்*** நடைபெற்றது. ஒவ்வொரு மாத அனுஷ நட்சத்திரத்தன்றும் 'ஸதஸ்' மாலை 7 மணி சுமாருக்கு நடைபெறும்.

❀ ❀ ❀

### டிசம்பர் 22-ந் தேதியன்று

சென்னை கார்த்திக் பைன் ஆர்ட்ஸ் சபையின் ஆதரவில், மயிலை பாரதீய வித்யா பவனில் காலை 7 முதல் 9 மணி வரை ஸ்ரீ குருஜி ***'ஸ்ரீ பண்டரீபுர பக்தாள்'*** என்ற தலைப்பில் உபன்யாஸம் நடத்தினார்கள். உபன்யாஸம் மிகவும் உருக்கமாக அமைந்தது. திரளான ஜனங்கள் கூடியிருந்து நன்றாக அனுபவித்தார்கள்.

❀ ❀ ❀

## டிசம்பர் 23-ந் தேதியன்று

சென்னை மயிலை சமஸ்கிருதக் கல்லூரியில் மாலை 6-15 முதல் 7-15 வரை ஸ்ரீ குருஜி, *'ஸ்ரீ மஹா பெரியவாள் பெருமை'* என்ற தலைப்பில் உபன்யாஸம் நிகழ்த்தினார்கள். முதலில் ஸ்ரீ குருஜிக்கு, கல்லூரி சார்பில் பூர்ண கும்பத்துடன் வரவேற்பு அளிக்கப்பட்டது. கல்லூரியின் செக்ரட்டரி பிரம்மஸ்ரீ மாதவன் அவர்கள் ஸ்ரீ குருஜிக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். வேத பாஷ்ய ரத்னம் முல்லை வாசல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீ குருஜியை வரவேற்றுப் பேசினார்கள். குழுமியிருந்த ஜனங்கள் உபன்யாஸத்தைக் கேட்டு, மிகவும் ஆனந்தித்தார்கள்.

❀ ❀ ❀

## ஜனவரி 1-ந் தேதியன்று - வைகுண்ட ஏகாதசி

டிசம்பர் 31-ந் தேதி யன்று மாலை, மதுரபுரி ஆஸ்ரமத்தில் பெருமாளை யானை வாகனத்தில் அமர்த்தி புறப்பாடு செய்யப்பட்டது. இரவு *திவ்ய நாமமும்* நடந்தது. மறு நாள் (ஜனவரி 1) சரியாக காலை 4 மணியளவில் *பரமபத வாசல்* திறக்கப்பட்டு, பகவான் கருட வாகனத்தில் புறப்பாடு செய்யப்பட்டார். பிறகு 7 மணிக்கு விசேஷ திருமஞ்சனம் ஸ்ரீ ப்ரேமிக வரதனுக்கு செய்யப்பட்டது.

ப்ரேமிக பவனத்தில் மாலை 4 மணியளவில் மூலவர் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்குத் திருமஞ்சனம் செய்யப்பட்டது. இரவு 9 முதல் மறு நாள் விடியற்காலை வரையில் ப்ரம்மஸ்ரீ செதலபதி சௌந்தராஜ பாகவதர் அவர்களால் *அபங்க திவ்ய நாமமும்,* டைகர் ஜெயராமன் அவர்களால் *அபிநய திவ்ய நாமமும்* வெகு விமரிசையாக நடத்தப்பட்டன.

❀ ❀ ❀

## ஜனவரி 7-ந் தேதி முதல் 15-ந் தேதி வரை

மயிலை ஆர்.ஆர். ஸபாவில், பகவான் ஸ்ரீ ரமண மஹரிஷியின் *'அக்ஷர மண மாலை' இரண்டாம் பாகம்* - ஸ்ரீ குருஜியின் உபன்யாஸம் பூர்த்தியடைந்தது. நாளுக்கு நாள் உபன்யாசத்தைக் கேட்க வரும் ஜனங்களின் எண்ணிக்கை அதிகரித்து பூர்த்தியாகும் நாள் அன்று அநேகமாக ஆர்.ஆர். சபா நிரம்பிவிட்டது.

❀ ❀ ❀

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

### பிப்ரவரி 13-ந்தேதி

*'அத்வைத ஸித்தி' - வாக்யார்த்த ஸதஸ்* சென்னை ஜாபர்கான் பேட்டை ப்ரேமிக பவனில் இரவு சுமார் 7 மணிக்கு நடக்க உள்ளது.

❀ ❀ ❀

### பிப்ரவரி 17-ந்தேதி - 'மஹா சிவராத்திரி'

விழுப்புரம் அருகிலுள்ள *'வடவாம்பலம்'* ஸ்ரீ ஆத்ம போதேந்திர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் *மஹா சிவராத்திரி* அன்று ஸ்ரீ குருஜி ஐந்து கால அபிஷேம், பூஜை, ஆராதனை நிகழ்த்துவார்.

❀ ❀ ❀

### பிப்ரவரி 18-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷியின் *'அக்ஷர மண மாலை' - மூன்றாம் பாகம்* ஸ்ரீ குருஜியின் உபன்யாஸம், மயிலை ஆர்.ஆர். சபாவில் நடைபெறும். நேரம் : மாலை 7 முதல் 8.30 வரை.

---

முன் அட்டைப் படம் : (Photo by Sri S. Sridhar)

**20-12-95 அன்று ப்ரம்மஸ்ரீ எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்ற *'அத்வைத ஸித்தி' - வாக்யார்த்த ஸதஸில்* ஸ்ரீமான்கள் முல்லைவாசல் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், கோடா வெங்கடேச சாஸ்திரிகள், ஜே. வெங்கட்ராம சாஸ்திரிகள், விஜயராகவ சாஸ்திரிகள், மல்லிகார்ஜுன ஸோமயாஜி ஆகியோர் கலந்து கொண்டு வாக்யார்த்தம் சொன்னார்கள்.**

❀ ❀ ❀

பின் அட்டைப் படம் : (Photo by Jeweller Ravi)

**23-12-95 அன்று சம்ஸ்கிருதக் கல்லூரியில் *'ஸ்ரீ மஹா பெரியவாள் பெருமை' என்ற தலைப்பில் உபன்யாஸம்* நிகழ்த்திய ஸ்ரீ குருஜிக்கு, கல்லூரியின் செக்ரட்டரி பிரம்மஸ்ரீ மாதவன் அவர்கள் பொன்னாடை போர்த்தி கவுரவிக்கிறார்கள்.**

**மங்களானி பவந்து**


மதுரமுரளி

Registered as Newspaper in India

R. Dis. 2032/95 Regd. No. TN / MS (S) / 714

Single Copy Rs. 5/- Annual Subs. Rs. 60/-

வேணு : 1 பிப்ரவரி 1996 கானம் : 7



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Madras 600 095 and printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Madras 600 014. Editor : S. Sridhar